


# 11. 10. 2025

## தலைப்பு செய்திகள்

1. தன்தான்ய வேளாண் திட்டம் விவசாயிகளின் ஆக்கப்பூர்வமான எதிர்காலத்திற்கு வழிகோலும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2. தீபாவளி பண்டிகையை ஒட்டி, நாடுமுழுவதும் 12 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. ஜனநாயக அமைப்பின் அடித்தளமாக கிராமங்கள் திகழ்வதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் எடுத்துரைத்தார்.

4. கிருஷ்ணகிரி அணை நிரம்பும் தருவாயில் உள்ளதால் தென்பெண்ணை ஆற்றங்கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

5. வெஸ்ட் இண்டீஸுக்கு எதிரான 2-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 518 ரன் எடுத்த நிலையில் இந்தியா ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

## இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர்

நாட்டின் விவசாயிகளுக்கு ஆக்கப்பூர்வமான எதிர்காலத்தை தன்தான்ய பெருக்க திட்டம் ஏற்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 42 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தன்தானியம் மற்றும் பருப்பு வகைகளில் தன்னிறைவு திட்டத்தை இன்று துவக்கிவைத்து பேசிய பிரதமர், கடந்த 11 ஆண்டுகளில் வேளாண் துறைக்கான மத்திய அரசின் பட்ஜெட் நிதி ஒதுக்கீடு 6 மடங்காக அதிகரித்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

பால் உற்பத்தியில் இந்தியா முதன்மை நாடாகவும்,

மீன் உற்பத்தியில் 2ஆவது நாடாகவும் உருவெடுத்துள்ளது என்றார்.

கடந்த 11 ஆண்டுகளில் நம் நாட்டில் தேன் உற்பத்தி இரு மடங்காக உயர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கால்நடை பராமரிப்பு, மீன் பண்ணை, தேனீ வளர்ப்பு போன்றவை சிறிய விவசாயிகளுக்கும், நிலமற்ற ஏழை விவசாய குடும்பங்களுக்கும், ஆளுமை வழங்கியிருப்பதாக பிரதமர் சுட்டிக்காட்டினார்.

சரக்கு சேவை வரி சீர்திருத்தங்களின் கீழ், விவசாயிகள் பயன்பெறும் வகையில், ட்ராக்டர் மற்றும் வேளாண் உபகரணங்களுக்கான வரி குறைக்கப்பட்டிருப்பதை பிரதமர் எடுத்துரைத்தார்.

***********

## ஜெயபிரகாஷ் நாராயணன்

விடுதலை போராட்டங்களில் பங்கேற்ற பழம்பெரும் தலைவர் ஜெயபிரகாஷ் நாராயணனின் 123-ஆவது பிறந்த தினத்தை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், தமது செய்தியில், சமூக மாற்றத்திற்கான அன்னாரது செயல்பாடுகள் இளைய தலைமுறையினரை இன்றும் வழிநடத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி வெளியிட்டுள்ள செய்தியில் இந்திய அரசியல் அமைப்பை பாதுகாத்து, ஜனநாயகம் மற்றும் சமூக நீதியை நிலைநாட்ட உறுதியுடன் குரல் கொடுத்த ஜெயபிரகாஷ் நாராயணனின் செயல்பாடுகள் அனைவருக்கும் உத்வேகம் அளிப்பதாக கூறினார்.

***********

**அஷ்விணி வைஷ்ணவ்**

தீபாவளி மற்றும் சத் பூஜா பண்டிகைகால கூட்ட நெரிசலை தவிர்ப்பதற்காக நாடுமுழுவதும் 12 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், கழிப்பிடம் உள்ளிட்ட ரயில் பயணிகளுக்கான அனைத்து அடிப்படை வசதிகளும் நிறைவேற்றப்படுவதாக தெரிவித்தார்.

***********

**பீஹார்**

பீஹார் சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் தொகுதி பங்கீடு இன்று இறுதி செய்யப்பட உள்ளது.

கட்சியின் தேசிய தலைவர் திரு.ஜே.பி.நட்டா தலைமையில் இன்று நடைபெறும் உயர்நிலை ஆலோசனைக்கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்படும்.

இந்த கூட்டத்திற்கு பின்னர் தொகுதி பங்கீடு குறித்து இன்றே அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

***********

**சர்வதேச பெண் குழந்தைகள் தினம்**

சர்வதேச பெண் குழந்தைகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

**மாற்றத்தை முன்னெடுத்து செல்வதில் பெண் குழந்தைகளின் பங்கு** என்ற இந்தாண்டின் கருப்பொருளுடன் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

பெண்குழந்தைகளின் உரிமைகள், பாதுகாக்கப்படும் அதேவேளையில், எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கான ஆக்கப்பூர்வமான கருத்துக்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படுவதை வலியுறுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

***********

முதலமைச்சர் கிராமசபை

ஜனநாயக அமைப்பின் அடித்தளமாக கிராமங்கள் திகழ்வதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இன்று நடைபெற்ற கிராம சபை கூட்டங்களில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கான அனைத்து திட்டங்களும் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

குடிசை இல்லா தமிழகம் என்ற நிலையை எட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், கிராமப்புற குழந்தைகள் கல்வி பெறுவதை அனைவரும் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நோயற்ற வாழ்விற்கு சுகாதாரத்தின் அவசியத்தை வலியுறுத்திய அவர், கிராமங்களை சுத்தமாக வைத்திருப்பதன் அவசியத்தையும் முதலமைச்சர் எடுத்துரைத்தார்..

தண்ணீர் பற்றாக்குறையை தடுக்க மழை நீர் சேமிப்பை விரைவுபடுத்த வேண்டும் என கூறிய முதலமைச்சர் கிராமங்களின் வளர்ச்சியே மாநிலத்தின் வளர்ச்சியை நிலைநாட்டுவதாக குறிப்பிட்டார்.

கிராம சபை கூட்டங்களில் வளர்ச்சி பணிகள் தொடர்பாக பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் உறுதியளித்தார்.

**வாய்ஸ்**

சென்னை கொளத்தூரில் 53 கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்பட்டுள்ள நவீன வண்ண மீன்கள் வர்த்தக மையத்தையும் முதலமைச்சர் இன்று திறந்துவைக்கிறார்.

***********

**கே.ஆர்.பெரியகருப்பன்**

தமிழகத்தில் கிராமப்பகுதி முன்னேற்றத்திற்கு தனி கவனம் செலுத்தப்பட்டு வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் புழுதிபட்டி - மட்டங்காடு, பொன்னமராவதி – சங்கிலி கருப்பு வரையிலான 59 லட்சம் ரூபாய் மதிப்பிலான கிராமசாலை மேம்பாட்டு பணிகளை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், மாநிலத்தின் தேவைக்கேற்ப புதிய சாலைகள் அமைக்கப்படுவதாக கூறினார்.

பிரதான சாலைகளிலிருந்து கிராம பகுதிகளுக்கு செல்லும் அனைத்து சாலைகளும் செப்பனிடப்படுவதன் மூலம் கிராம பகுதிகள் வளம்பெறுவதாக குறிப்பிட்டார்.

***********

மூர்த்தி

மதுரை தமுக்கம் மைதானத்தில் **மாமதுரை, இயற்கை மதுரை** என்ற கருப்பொருள் அடிப்படையிலான இயற்கை வணிக கண்காட்சி

விற்பனையை மாநில வணிகவரி பதிவுத்துறை அமைச்சர் திரு.மூர்த்தி இன்று தொடங்கிவைத்தார்.

வேளாண் விரிவாக்க திட்டங்கள் மற்றும் உயிர்ம வேளாண்மை முன்னெடுப்பு குறித்து இதில் எடுத்துரைக்கப்பட்டது.

***********

**கன்னியாகுமரி**

உலக வலசை பறவைகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி கன்னியாகுமரி மாவட்டத்தில் பறவைகளுக்கும் மனிதர்களுக்குமான நல்லிணக்கத்தை உருவாக்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வன அலுவலர் டாக்டர் அன்பு தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

***********

**கும்பக்கரை**

கொடைக்கானல் வனப்பகுதியில் தொடர் கன மழை காரணமாக தேனி கும்பக்கரை அருவியில் வெள்ளபெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் அங்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

***********

**அணை**

கிருஷ்ணகிரி அணை வேகமாக நிரம்பி வரும் நிலையில் அணைக்கு வரும் 7 ஆயிரத்து 500 கனஅடி தண்ணீரும் வெளியேற்றப்படுவதால் தர்மபுரி, திருவண்ணாமலை, கடலூர்,

விழுப்புரம் மாவட்ட தென்பெண்ணை ஆற்றங்கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஆந்திர மாநிலம் கலவகுண்டா அணை நிரம்பியதை அடுத்து வேலூர் மாவட்டம் பொன்னை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலெட்சுமி அறிவுறுத்தியுள்ளார்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று காலை வினாடிக்கு 65 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

அருவிகளில் வெள்ள பெருக்கு காரணமாக சுற்றுலா பயணிகள் மற்றும் பரிசல் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

***********

**மீனவர்கள்**

இலங்கை சிறையில் உள்ள 30 ராமேஸ்வரம் மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரி விசைப்படகு மீனவர்கள் இன்றுமுதல் காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக கூறி, கடந்த புதன்கிழமை கடலுக்கு சென்ற மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்ததுடன், அவர்களது 4 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

***********

இருவரி

திருவாரூர் மாவட்டத்தில் தீ தடுப்பு பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, குடவாசல், நீடாமங்கலம் உள்ளிட்ட 12 தீயணைப்பு நிலையங்களில் இன்றும், நாளையும் நடைபெறுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ முகாம்கள் இனி புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் என ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

***********

போராட்டம்

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் சீரான மின்விநியோகத்தை வலியுறுத்தி, பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மழைக்காலங்களில் நீண்ட நேரம் மின்தடை ஏற்படுவதால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

***********

வானிலை

தமிழ்நாட்டில் வரும் 17ஆம் தேதிவரை கன மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, தஞ்சை, திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் இன்று கன முதல், மிக கனமழையும்,

சேலம், ஈரோடு, நாமக்கல், திருச்சி, கரூர், திருப்பூர், கோவை, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களில் கன மழையும் பெய்யக்கூடும் என்று இம்மையம் கூறியுள்ளது.

***********

கிரிக்கெட்

புதுதில்லியில் இந்தியாவிற்கு எதிரான 2-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2-ம் நாளான இன்று வெஸ்ட் இண்டிஸ் தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் விக்கெட் இழப்பின்றி 12 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக அபாரமாக விளையாடிய இந்தியா தனது முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 518 ரன் எடுத்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

சுப்மான் கில் 129 ரன் குவித்தது இன்றைய ஆட்டத்தின் சிறப்பம்சமாகும்.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**